**தலைப்பு 207 – தொல்பொருளியல் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தொல்பொருளியல் திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2021 ஆகஸ்ட் 09 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களம் தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2021 ஆகஸ்ட் 18 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தொல்பொருளியல் திணைக்களத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் அதனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக வெற்றிகரமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கப்படும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) இந்நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| பந்திக்கான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை |
|---|---|---|
| 1.6.1(ஆ) | திணைக்களமானது தலைமை அலுவலகம் அமைந்துள்ள ரூபா 911.5 மில்லியன் பெறுமதியான காணி மற்றும் ரூபா 138 மில்லியன் பெறுமதியான கட்டிடம் என்பவற்றின் உரிமைத்துவத்தை கையேற்க வேண்டும் என முன்னைய கணக்காய்வு அறிக்கைகள் அறிவுரை வழங்கியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது இது போதியளவில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | ஆதனத்தின் உரிமைத்துவத்தை திணைக்களத்திற்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்குகளை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் பாரம்பரிய சொத்துக்களானது புராதன கட்டிடங்கள் மற்றும் நினைவுச்சின்னங்கள், தொல்பொருளியல் தளங்கள், பாதுகாக்கப்பட்ட பகுதிகள், இயற்கை வளங்கள் மற்றும் கலைப்பொருட்களை உள்ளடக்குகின்றன. நிலையான கணக்கீட்டு கோட்பாடுகள் மற்றும் கணக்கீட்டுக் கொள்கைக்கு இணங்க இந்த விலைமதிப்பற்ற சொத்துக்களை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கும் பல ஆண்டுகளாக பௌதீக மெய்மையாய்வை நடாத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | புராதன பொருட்களின் மதிப்பு விலைமதிப்பற்றதாக உள்ளதால் நினைவுச் சின்னங்கள் மற்றும் ஏனைய புராதன சொத்துக்களின் பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் பதிவுசெய்ய முடியாதிருந்தன. | புத்தகங்களில் நிதியல்லாச் சொத்துக்களை குறிப்பிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன் அவை தொடர்பான தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

### 1.6.2 நிதி நிலைமைக் கூற்று

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் தளபாடம் மற்றும் அலுவலக உபகரணம் மற்றும் மூலதன சொத்துக்களின் கொள்வனவு மீதான மொத்தச் செலவினம் ரூபா 717,270 ஆக காணப்பட்ட போதிலும் நிதியல்லாச் சொத்துக்களின் அசைவு தொடர்பான அறிக்கையில் அப் பெறுமதியானது ரூபா 719,567 அதிகரிப்புடன் ரூபா 1,436,837 ஆக அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன் அதே அறிக்கையில் இயந்திரம் மற்றும் உபகரணத்திற்கான ரூபா 2,108,516 மொத்தப் பெறுமதியானது ரூபா 719,567 குறைவுடன் ரூபா 1,388,949 ஆக குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்ட ரூபா 709,568 தொகை அலுவலக உபகரண கொள்வனவிற்கானதாக பதிவுசெய்யப்பட்டிருந்ததன் காரணமாக இவ் வேறுபாடு காணப்பட்டது. திறைசேரியுடன் கலந்துரையாடி என்னால் சீர்செய்யப்படும். | பதிலின் பிரகாரம் சீர்செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | ஏனைய மூலதன செலவினங்களின் கீழ் பல்வேறு தரப்பினர்களிடமிருந்து பெறப்பட்டு ஆய்வு, அகழ்வாராய்ச்சி மற்றும் பாதுகாப்பு செயற்திட்டங்களுக்காக செலவிடப்பட்ட ரூபா 80,664,737 கூட்டுமொத்தம் நிதியல்லாச் சொத்துக்களின் அசைவு தொடர்பான அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | சில சமயங்களில் அகழ்வாராய்ச்சியில் புராதன பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டாலும், அவை இன்னும் விலைமதிப்பற்றதாகவே கருதப்படுகின்றன. அதற்கிணங்க அவை நிதியல்லாச் சொத்துகளாக பதிவு செய்யப்படுவதில்லை. | பல்வேறு தரப்பினர்களிடமிருந்தான பல்வேறு செயற்திட்டங்களிற்கான பெறுவனவுகள் நிதியல்லாச் சொத்துக்களின் அசைவு தொடர்பான அறிக்கையிலும் குறிப்பிடப்பட வேண்டும். |

### 1.6.3 அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பணக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் தனி மீதி வகைப்படுத்தல் பொழிப்பின் தொகை ரூபா 96,377,512 ஆக காணப்பட்ட போதிலும் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி ரூபா 96,989,808 ஆக காணப்பட்டதால் 05 ஆண்டுகளிற்கு மேலாக ரூபா 612,296 வேறுபாட்டை இணக்கம் செய்து தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வேறுபாடு ரூபா 612,265.85 ஆகும். இவ் வேறுபாட்டை சரிபார்த்து தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பதிலின் பிரகாரம் இவ் வேறுபாடு சரிபார்க்கப்பட்டு தீர்க்கப்பட வேண்டும். |

### 1.6.4 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| திணைக்கள புத்தகங்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வைப்புக் கணக்குகள் தொடர்பான கூற்றில் உள்ள 6000-0-0-13-0-119 ஆம் இலக்க வைப்புக் கணக்கு மீதி அத் திகதியிலுள்ளவாறான திறைசேரி புத்தகங்களுடன் ஒப்பிடும் போது ரூபா 35,000 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன் 6000-0-0-13-0-153 ஆம் இலக்க வைப்புக் கணக்கின் திணைக்களப் புத்தகங்களின் பிரகாரமான மீதியானது அத் திகதியிலுள்ளவாறான திறைசேரிப் புத்தகங்களின் பிரகாரமான மீதியை விட ரூபா 35,000 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. அவ் வேறுபாடு இனங்காணப்பட்டு சீர்செய்யப்பட்டிருக்கவில்லை. | இது காலக்கிமத்தில் சீர்செய்யப்படும். | இப் பொது வைப்புக் கணக்கு மீதிகளை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.5 கட்டுநிதி மீதி

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 நவம்பர் 30 ஆம் திகதிய 06/2020 ஆம் இலக்க திறைசேரி செயற்பாடுகள் வழிகாட்டலின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டுநிதிக் கணக்கு தீர்ப்பனவு செய்யப்பட்டு காசுப் புத்தக மீதி திறைசேரிக்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும் அத் திகதியிலுள்ளவாறான ரூபா 6,404,075 தொகையான காசுப் புத்தக மீதி 2021 சனவரி 18 ஆம் திகதி வரையான தாமதமொன்றுடன் அனுப்பப்பட்டிருந்தது. | வைப்புக் கணக்கிற்கு திசெம்பர் மாதத்தில் எதிர்பாராதவிதமாக பெறப்பட்ட பணம் செலிடப்படாதமையால் இத் தொகை காணப்படுகின்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் கட்டுநிதியை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் போது 18 மூலதன செலவின விடயங்களிற்கான மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 154,246,000 ஆக காணப்பட்டதுடன் மொத்த உள்ளபடியான செலவினம் ரூபா 88,888,190 ஆக காணப்பட்டதால் மொத்த தேறிய நிதியேற்பாட்டிலிருந்து ரூபா 65,357,810 சேமிப்பை விளைவித்திருந்தது. இது மொத்த நிதியேற்பாட்டில் 42% ஆக மாத்திரமேயுள்ளதால் மூலதன செலவினத்திற்காக மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடுகள் ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டில் கொரோனா நோய் நாடு முழுவதும் பரவியதன் காரணமாக திணைக்களங்களின் உள்ளூர் ரீதியாக அமுல்ப்படுத்தப்பட்ட செயற்திட்டங்களிற்கு உள்ளூர் ரீதியாக ஊழியர்களை அனுப்புவதிலுள்ள (பயணக் கட்டுப்பாடுகள் காரணமாக) சிக்கல் காரணமாக எதிர்பார்க்கப்பட்டவாறு பல செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட முடியாதிருந்தன. | மூலதன செலவினத்திற்காக மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடுகள் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களிற்கு பயன்படுத்தப்பட வேண்டியதுடன் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்துதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 08 மீண்டெழும் செலவினங்களிற்குரிய பாதீடப்பட்ட ஒதுக்கீட்டு மீதிகளை விஞ்சி அச் செலவின விடயங்கள் தொடர்பாக ரூபா 2,762,182 கூட்டுமொத்தமான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | பிரதானமாக திணைக்கள வாகனங்கள் மிகவும் பழையதாக உள்ளதுடன் வருடாந்தம் மேற்கொள்ளப்படும் நிதியேற்பாடு பெற்றுக் கொள்ளப்பட்டிருக்காமை காரணமாக பொறுப்புக்கள் அதிகரித்திருந்தன. | மதிப்பிடப்பட்ட நிதியேற்பாட்டு எல்லையினுள் பொறுப்புக்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2.3 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்படும் நிதியேற்பாடுகளை பயன்படுத்துதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வீடமைப்பு மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சால் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகளின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டிலிருந்து செயற்திட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் செலவின உறுதிச்சீட்டுக்கள் மத்திய கலாச்சார நிதியத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு பணம் மீள்நிரப்புச் செய்யப்பட்டிருந்தது. எனினும் ரூபா 38,064,351 மொத்த செலவினத்தை மீள்நிரப்புச் செய்வதற்கு 2019 மற்றும் 2020 இல் மத்திய கலாச்சார நிதியத்திடம் கோரிக்கை மேற்கொள்ளப்பட்ட போதிலும் தொகை மீள் நிரப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. | 2019 திசெம்பர் 04 தொடக்கம் 2020 திசெம்பர் 17 வரை கோரப்பட்ட பணம் இன்னமும் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன் பெறுமதி ரூபா 38,664,351 ஆகும். மத்திய கலாச்சார நிதியத்திற்கு வருமான இழப்பு ஏற்பட்டிருந்ததால் விலைப்பட்டியல்களை செலுத்துவதற்கு பணத்தை விடுவிப்பது தாமதமடைந்திருந்தது. | இச் செயற்திட்டங்கள் மூலம் திட்டமிடப்பட்ட வேலையை தொடர்வதற்கு தேவையான நிதியேற்பாடுகள் சேகரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2017 மே 02 இல் பகியங்கல குகை செயற்திட்டத்திற்காக மத்திய கலாச்சார நிதியத்தால் ரூபா 5,002,431 மொத்த தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அத் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்ட நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் 2020 ஒக்தோபர் 09 ஆம் திகதி நாட்குறிப்பு பதிவொன்றை பயன்படுத்தி மத்திய கலாச்சார நிதியத்தின் பங்களிப்பின் கீழ் தொடங்கப்பட்ட ஏனைய செயற்திட்டங்களிற்காக மூலப்பொருள் வழங்குநர்களிற்கு செலுத்துவதற்கு இது பயன்படுத்தப்பட்டுள்ளது. | மத்திய கலாச்சார நிதியத்திடமிருந்து பெறப்பட்ட பணம் பாதுகாப்பு, அகழ்வாராய்ச்சி மற்றும் பராமரிப்பிற்கு பயன்படுத்தப்பட முடியும் என்பதால் அவை மேற்கொள்ளப்பட்டிருந்தன. | ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படுகின்ற அதே நோக்கத்திற்கு கலாச்சார நிதியத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்ட பணம் பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | புத்தசாசனம், கலாசாரம் மற்றும் சமய அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளரின் 2020 பெப்ரவரி 24 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் மத்திய கலாச்சார நிதியத்தின் ரூபா 18,711,101 கூட்டுமொத்தமான நிதிகளைப் பயன்படுத்தி அமுல்ப்படுத்தப்பட வேண்டிய செயற்திட்டங்கள் அமைச்சின் செயலாளரால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. 2020 ஆம் ஆண்டிற்கான செயற்திட்டங்களின் பௌதீக மற்றும் நிதி இலக்குகளை உள்ளடக்கிய செயல்நடவடிக்கைத் திட்டத்தை சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், இந்த செயற்திட்டங்களுக்கான செயல்நடவடிக்கைத் திட்டம் எதுவும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கொரோனா தொற்று நிலைமையின் விளைவாக அலுவலகப் பணிகள் சரியாகச் செயற்படாததன் காரணமாக செயல்நடவடிக்கைத் திட்டத்தைத் தயாரிப்பது புறக்கணிக்கப்பட்டுள்ளது. இது காலக்கிரமத்தில் சரியாக தயாரிக்கப்படும். | இச் செயற்திட்டங்களிற்கான செயல்நடவடிக்கைத் திட்டங்கள் பட்டியலிடப்பட்டவாறு தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | ராஜகலதென்ன தொல்பொருளியல் ஆய்வு தொடர்பான பாதுகாப்புப் பணிகள் அமெரிக்க நிதியுதவியின் கீழ் 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதிக்கிடையே ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இச் செயற்திட்டத்திற்காக 2020 ஆம் ஆண்டில் ரூபா 5.257 மில்லியன் நிதி பங்களிப்பு பெறப்பட்டிருந்த போதிலும் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திற்கும் தொல்பொருளியல் திணைக்களத்திற்கும் இடையிலான ஒப்பந்தச் செயற்பாட்டில் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலைமை காரணமாக மீளாய்வாண்டின் போது குறித்த செயற்திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கொரோனா தொற்றுநோய் மற்றும் நாடு மூடப்பட்டிருந்தமை காரணமாக எதிர்பார்க்கப்பட்டவாறு இச் செயற்திட்டங்களை பூர்த்தி செய்ய முடியாதிருந்தது. | 2022 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த இச் செயற்திட்டங்கள் திட்டமிடப்பட்டவாறு பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | களனி ரஜமஹா விகாரையில் உள்ள ஓவியங்கள் மற்றும் சிற்பங்களை பாதுகாப்பதற்காக 2015 ஆம் ஆண்டின் போது அரச கூட்டுத்தாபனம் ஒன்றினால் ரூபா 1,500,000 தொகை வழங்கப்பட்டிருந்தது. 2020 ஆம் ஆண்டளவில் பல ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் வைப்புப் பதிவேட்டில் நிலுவையாகவுள்ள ரூபா 1,494,434 மீதி 2020 திசெம்பர் 11 இல் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | ஆய்வுகூடப் பிரிவினால் பதில்கள் கோரப்பட்ட போதிலும், பதில்கள் கிடைத்திருக்கவில்லை, மேலும் களனி ரஜமஹா விகாரையில் உள்ள ஓவியங்கள் மற்றும் சிற்பங்களைப் பாதுகாக்கும் பணியில் தாமதமொன்று காணப்படுகின்றதென்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். | வெளி முகவர்களிடமிருந்து பெறப்பட்ட பணமானது உரிய பணம் வழங்கப்பட்டமைக்கான நோக்கத்திற்கு பயன்படுத்தப்பட வேண்டும். |

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | | இணங்காமை | | |
| (அ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | | | | |
| | (i) | 11 ஆம் பிரிவு | 10 பிராந்திய அலுவலகங்களில் 2020 ஆம் ஆண்டின் போது பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட்டிருந்ததுடன் அவ் அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சாத்தியமானளவு விரைவாக மெய்மையாய்வுகளை பூர்த்தி செய்து அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த மெய்மையாய்வுகள் நடாத்தப்பட்டு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| | (ii) | 13.2 ஆம் பிரிவு | கோட்டை தொல்பொருளியல் அருங்காட்சியக வளாகத்தில் பழுதடைந்த இரண்டு கார்களும், திணைக்களத் தலைமை அலுவலக வளாகத்தில் உள்ள 03 மோட்டார் கார்கள் மற்றும் 06 மோட்டார் சைக்கிள்களும் சுற்றறிக்கையின் பிரகாரம் அப்புறப்படுத்தப்படாமல் பல வருடங்களாக பழுதடைந்துள்ளன. | இந் நோக்கத்திற்காக விசேட குழுவொன்று நியமனம் செய்யப்பட்டுள்ளதுடன் அவ் வாகனங்களை அப்புறப்படுத்துவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படும். | இச் சுற்றறிக்கையின் பிரகாரம் பயன்படுத்தப்பட முடியாத மோட்டார் கார்கள் அப்புறப்படுத்தப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2020 பெப்ரவரி 28 ஆம் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 04 ஆம் இலக்க வழிகாட்டல் | அரசாங்க உத்தியோகத்தர் முற்பண ''பீ'' கணக்கிணக்கக் கூற்றிற்கான கடன்பட்டோர் ஆவணம் மற்றும் கடன்கொடுத்தோர் ஆவணங்கள் நாளதுவரையாக்கப்பட்டு பேணப்பட வேண்டும். | இவ் ஆவணங்கள் பேணப்பட்டுள்ளன. | இச் சுற்றறிக்கையின் பிரகாரம் கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் ஆவணங்கள் பேணப்பட வேண்டும். |

## 2.5 அரசாங்க உத்தியோகத்தர் முற்பணக் கணக்கிணக்கக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தின் இறந்த, ஓய்வுபெற்ற, பணிநீக்கம் செய்யப்பட்ட ஊழியர்களின் மொத்த நிலுவை மீதி ரூபா 5,289,100 ஆக காணப்பட்டது. அப் பெறுமதியில் ரூபா 1,620,953 கூட்டுமொத்தம் 05 ஆண்டுகளுக்கும் மேலாக செலுத்த வேண்டிய மீதிகளாக உள்ளன, மேலும் அந்த மீதிகளை அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | இந்நிலுவைகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.6 வங்கிக் கணக்குகளின் செயற்பாடுகள்

வங்கிக் கணக்குகளின் செயற்பாடுகள் தொடர்பாக நடாத்தப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட குறைபாடுகள் கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்கள தலைமை அலுவலகத்தின் நடைமுறைக் கணக்கில் உள்ள ரூபா 1,426,091 கூட்டுமொத்த பெறுமதியான காசோலைகள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வழங்கப்பட்ட போதிலும் சமர்ப்பிக்கப்படாத காசோலைகளின் எண்ணிக்கை 144 ஆகும். 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் உள்ள வங்கிக் கணக்குகள் தொடர்பான குறிப்பின் பிரகாரம் காசோலைகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் காணப்பட்டதென எந்த தகவலும் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | தனிப்பட்ட முகவரிகளை கண்டுபிடிக்க முடியாதிருந்ததால் இக் காசோலைகள் பொது வைப்பு கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டுள்ளன. பின்னர், நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு அரசாங்க வருமானத்திற்கு இது செலவு வைக்கப்படும். | உரிமை கோரப்படாத காசோலைகளின் விபரங்கள் உரிய குறிப்பில் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். |

**2.7 வைப்புக் கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது 92 செயற்திட்ட நடவடிக்கைகளிற்காக பெறப்பட்ட நிதியேற்பாடுகளில் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்காத நிதியேற்பாடுகளின் மொத்த மீதி ரூபா 27,260,458 ஆக காணப்பட்டது. | பிராந்திய உதவிப் பணிப்பாளர்களிடமிருந்து தகவல்கள் கோரப்பட்டுள்ளதுடன் நீண்டகாலமாக செயற்பாட்டில் இருக்காத செயற்திட்டங்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | தகவல்கள் பெறப்பட்டு செயற்பாடற்ற செயற்திட்டங்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2014 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியின் போது தொல்பொருளியல் தளங்களின் 14 அகழ்வாராய்ச்சி, பாதுகாப்பு, பழுதுபார்த்தல் செயற்திட்டங்களுக்காக அன்பளிப்பாக அரசாங்க திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட நிதியில், செயற்திட்டச் செயற்பாடுகள் அமுல்ப்படுத்தப்பட்ட பின்னர் தீர்ப்பனவு செய்யப்படாமல் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வைப்புக் கணக்கில் ரூபா 14,463,670 கூட்டுமொத்த தொகை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. | தகவல்கள் கோரப்பட்டுள்ளதுடன் நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் அரசாங்க வருமானத்திற்கு அப் பணம் செலவு வைக்கப்படும். | பதிலின் பிரகாரம் செயற்படுவது பொருத்தமானதாகும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | தொல்பொருளியல் தளங்களுக்கான 17 நிர்மாண மற்றும் பராமரிப்பு ஒப்பந்தங்களின் கொடுப்பனவுகளில் ரூபா 2,194,747 தொகை 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. | கோரப்பட்ட தகவல்கள் பெறப்பட்டதும் நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் அரசாங்க வருமானத்திற்கு அப் பணம் செலவு வைக்கப்படும். | பதிலின் பிரகாரம் செயற்படுவது பொருத்தமானதாகும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 கடமைப்பொறுப்புக்களை ஆற்றத் தவறியமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தின் மேல் மாகாண அலுவலகத்தின் கீழுள்ள பஹியங்கல குகை வளாகத்தில் பாதுகாப்பு மற்றும் அகழ்வாராய்ச்சிப் பணிகள் 2012 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஏறத்தாழ 9 ஆண்டுகளாக இடைநிறுத்தப்பட்டுள்ளன. கணக்காய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட கள பரீட்சிப்புக்களின் பிரகாரம், ஏறத்தாழ 40 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட பகுதியொன்றை உள்ளடக்குகின்ற குகையைச் சுற்றி அப்பகுதியில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்துடன் எல்லைக் கம்பங்கள் எதுவும் அமைக்கப்பட்டிருக்கவில்லை, மேலும் குகை தொடர்பாக எந்தத் தேடல் ஆய்வும் நடாத்தப்பட்டு தேடல் பதிவு வழங்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டின் மதிப்பிடப்பட்ட மாதத்திற்கு முன்னர் பூர்த்தி செய்யப்படுவதற்கு இவ் அபிவிருத்தி பட்டியலிடப்பட்டுள்ளது. | வேலையை பூர்த்தி செய்தல், ஆய்வின் பின்னர் எல்லைக் கம்பங்களை நடுதல் மற்றும் ஆய்வுப் பதிவை வழங்குதல் என்பன பதிலின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2020 ஆம் ஆண்டின் போது திணைக்களத்தின் அனைத்துப் பிரிவுகளாலும் 28 செயற்திட்டங்கள் பொது வைப்புக்களின் கீழும் வெளிப்புற நிறுவனங்களின் நன்கொடைகளுடனும் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன. ஆய்வு மற்றும் ஆவணப்படுத்தல் பிரிவு மற்றும் கட்டிடக்கலைப் பாதுகாப்புப் பிரிவினால் அமுல்ப்படுத்தப்பட்ட 02 செயற்திட்டங்களைத் தவிர, அந்த 28 செயற்திட்டங்களில் எஞ்சிய 26 செயற்திட்டங்களினதும் பௌதீக முன்னேற்றம் 50 சதவீதத்திற்கும் குறைவான மட்டத்தில் காணப்பட்டது. | நாட்டில் கொரோனா நோய் பரவல் மற்றும் தனிமைப்படுத்தல் விதிகள் மற்றும் பயணக் கட்டுப்பாடுகள் காரணமாக செயற்திட்டங்களை எதிர்பார்த்தவாறு பூர்த்தி செய்ய முடியாதிருந்தது. | 2020 ஆம் ஆண்டின் போது நாட்டில் கொரோனா வைரஸ் பரவிய போதிலும் பிராந்திய ரீதியாக பல பணியிடங்கள் இருப்பதன் காரணமாக 2020 ஆம் ஆண்டில் அடைந்துகொள்ளப்பட்ட செயன்முன்னேற்றத்தை விட அதிக செயன்முன்னேற்றத்தை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 பிரதான செயற்பாடுகளிற்கு முரணான நடவடிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தொல்பொருளியல் இடங்கள் மற்றும் நினைவுச்சின்னங்களின் பாதுகாப்பு மற்றும் காப்பிற்காக தொல்பொருளியல் திணைக்களத்தினால் நிறுவப்பட்ட பிடகோட்டை சந்தியில் உள்ள ஜுபிலி கம்பம் 2020 ஆம் ஆண்டின் போது வீதி பராமரிப்புக்காக அகற்றப்பட்டிருந்தது. கி.பி. 1887 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இந்த நினைவுச்சின்னம், பிடகோட்டை அருங்காட்சியகத்தில் எவ்வித ஆவணங்களும் இன்றி நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன் வீதிப் பராமரிப்புப் பணிகள் நிறைவடைந்த போதிலும் அதனை மீளநிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வீதி அபிவிருத்திக்காக இந்த ஜுபிலி கம்பம் தற்காலிகமாக அகற்றப்பட்டிருந்ததுடன் இன்னும் வீதி அபிவிருத்தி பணிகள் பூர்த்தியடைந்துள்ளதென அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், ஜுபிலி கம்பம் சந்தியில் நிச்சயமாக மீளநிறுவப்படும். | பதிலின் பிரகாரம் மீளநிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 உள்ளூர் நிதிகள் மூலம் அமுல்ப்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| வரலாற்றுச் சிறப்புமிக்க கோட்டை இராச்சியத்திற்குச் சொந்தமான கோட்டைச் சுவரை உயர்த்துதல், அகழ்வாராய்ச்சிகளை மேற்கொள்ளுதல், அகழிகளை கண்காட்சி நிலைக்கு தரமுயர்த்துதல் போன்றன கோட்டையைப் பாதுகாப்பதன் நோக்கம் ஆகும். கோட்டையின் சுவர் அங்கீகரிக்கப்படாத நிர்மாணங்கள், மண் மற்றும் மரங்களால் மூடப்பட்டிருந்ததுடன் சுமார் 2000 மீற்றர் சுவர் தற்போது பாதுகாக்கப்படுகின்றது. தேசிய கொள்கைகள் மற்றும் சமய அலுவல்கள் அமைச்சு 2020 ஆம் ஆண்டில் சுவரின் பாதுகாப்பிற்காக ரூபா 9,500,000 தொகையை ஒதுக்கீடு செய்திருந்த போதிலும் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த செலவினம் ரூபா 2,065,585 ஆக காணப்பட்டதால் அதன் நிதி மற்றும் பௌதீக செயன்முன்னேற்றம் முறையே 22 சதவீதம் மற்றும் 55 சதவீதம் ஆக காணப்பட்டது, | கடுமையான பாதுகாப்பு தடைகள் காணப்பட்டன. இந்த சுவர் அகழப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும். இதற்கு laterite கற்களை கண்டுபிடிப்பதும் கடினமாக உள்ளது. 2018 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் ஆகக்கூடிய செயற்திறனை அடைந்துகொள்ளத் தவறியமை ”கிராம செலவினப் புத்தகம்” இன் பிரகாரமும் உண்மையாகும். இந்நிலைமைகளை காலக்கிரமத்தில் தவிர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | பதிலின் பிரகாரம் செயற்படுவதற்கு அறிவுறுத்தப்படுகின்றது. |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| திணைக்களத்தின் பிராந்திய மட்டத்திலான வகிபங்கை மேற்கொள்வதற்காக வலய அலுவலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அந்த வலய அலுவலகங்களில் பெரும்பாலானவை பௌத்த விகாரையிலோ அல்லது பொது கட்டிடத்திலோ குறைந்தபட்ச அலுவலக வசதிகளுக்கு மத்தியில் இயங்கி வருவது அவதானிக்கப்பட்டது. இந்த அலுவலகங்களில் சேவையில் | இந்த அலுவலகங்களின் உட்கட்டமைப்பு குறைவாக உள்ளது. கோவில்களில் அமைந்துள்ள குறிப்பிட்ட அலுவலகங்களையும் இடமாற்றம் செய்ய வேண்டிய நிலை உள்ளது. இந்த அலுவலகங்களுக்கு தேவையான வசதிகளை செய்து கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | திணைக்களத்தின் பிராந்திய அலுவலகங்கள் மற்றும் வலய அலுவலகங்களிற்கு தேவையான அலுவலக வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

உள்ள உத்தியோகத்தர்களிற்கு கிடைக்கக்கூடிய போதிய இடவசதி மற்றும் குறைந்தபட்ச அலுவலக வசதிகள் இல்லாத இடங்களை இனங்கண்டு தேவையான வசதிகளை செய்து கொடுக்க உயர் முகாமைத்துவம் நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

### 3.5 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேசிய முக்கியத்துவம் வாய்ந்த காணிகளை தொல்பொருளியல் காப்பகங்களாக அறிவித்து, அதன் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு முறையான நிகழ்ச்சித்திட்டம் ஒன்றை அமுல்ப்படுத்துவது திணைக்களத்தின் முக்கிய கடமைப்பொறுப்பாகும். கணக்காய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட பரீட்சிப்புக்களின் பிரகாரம் கடந்த 20 ஆண்டுகளின் போது அத்தகைய தேசிய முக்கியத்துவம் வாய்ந்த 11 காணிகள் மாத்திரமே காப்பகங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. | தடை செய்யப்பட்ட காணிகளை அறிவிக்கும் பணி நடைபெற்று வருகின்றதுடன் கடந்த 20 ஆண்டுகளின் போது 11 முறைகேடான காணிகள் ஒதுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த காணிகள் தொல்பொருளியல் காப்பகங்களாக உடனடியாக வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டும். |
| (ஆ) | யான் ஓயா நீர்த்தேக்க செயற்திட்டத்திற்காக நீர்த்தேக்கத்தில் மூழ்கியுள்ள பிரதேசத்தில் உள்ள புராதனப் பொருட்கள் அகழப்பட்டு அகற்றப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக தயாரிக்கப்பட்ட சேத மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் அந்தப் புராதன பொருட்களைப் பாதுகாப்பாக வைப்பதற்காக அருங்காட்சியகம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு முன்மொழியப்பட்டிருந்தது. மேலும் அதற்கான பூர்வாங்க | யான் ஓயா செயற்திட்டத்தின் போது கண்டுபிடிக்கப்பட்ட புராதன பொருட்கள் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட வேண்டும் என 2012 ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அகழ்வாராய்ச்சி மூலம் கண்டுபிடிக்கப்பட்ட புராதன பொருட்கள் அனுராதபுரம் பகுப்பாய்வுக் கிளை மற்றும் பதவியா தொல்பொருளியல் | இந்த அருங்காட்சியக நிர்மாணத்தின் தேவை மற்றும் இயலளவு தொடர்பாக ஆராய்ந்து அதற்கேற்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திட்டங்களையும் மதிப்பீடுகளையும் சமர்ப்பிக்குமாறு தொல்பொருளியல் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த அருங்காட்சியகத்தை நிர்மாணிப்பதற்கான பூர்வாங்க திட்டங்கள் மற்றும் மதிப்பீடுகள் தயாரிக்கப்படாமையால், அந்த புராதன பொருட்கள் பாதுகாப்பற்ற முறையில் பதவியா தொல்பொருளியல் வலய அலுவலகத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. | தளத்தில் வைக்கப்பட்டுள்ளன. அருங்காட்சியக கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டு நீர்ப்பாசன திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டுள்ளதுடன் அந்த கட்டிடம் நிர்மாணிக்கப்பட்ட பின்னர் அங்கு புராதன பொருட்களை நிறுவுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்படுகின்றது. | |
| (இ) | எபிகிரபி (Epigraphy), நானோ விஞ்ஞானப் பிரிவு ஆய்வுகூடப் பிரிவு மற்றும் வலய அலுவலகங்களில் திணைக்களத்திற்கு சொந்தமான அசையும் புராதன பொருட்களான ஏராளமான புராதன நாணயங்கள் ஆவணங்கள் இல்லாமல் இருப்பது அவதானிக்கப்பட்டது. | இந்த நாணயங்கள் பல ஆண்டுகளாக தொல்பொருளியல் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் அவற்றை முறையாகப் பாதுகாத்து ஆவணப்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. காலக்கிரமத்தில் வலய அலுவலகங்களில் நாணயங்களை ஆவணப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | அசையக்கூடிய புராதன பொருட்கள் மற்றும் நாணயங்கள் உடனடியாக ஆவணப்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | திணைக்களத்தின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள பிரதான கட்டடத்தின் தரை தளம், பல ஆண்டுகளாக செயற்திறன்மிக்க நோக்கங்களிற்கு பயன்படுத்தப்படாமல் விளைவற்றுள்ளது. | தரைத்தள சுவர்கள் மற்றும் தரையிலிருந்து தண்ணீர் கசிவதால் இது செயற்படாற்று காணப்படுகின்றது. இதனை 2022 ஆம் ஆண்டில் பயன்பாட்டுக்கு கொண்டுவருவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. | திணைக்களத்தின் தரை தளம் செயற்திறன்மிக்க நோக்கத்திற்கு பயன்படுத்தப்பட வேண்டும். |

**4. மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தில் உள்ள 84 பதவிகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 4356 ஆகவும், உள்ளபடியான | 1940 புதிய பதவிகள் அங்கீகரிக்கப்பட்டதன் மூலம் அதிக எண்ணிக்கையிலான வெற்றிடங்களிற்கு வழிவகுத்துள்ளது. இந்த | ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் ஏற்கனவே உள்ள விதிகள் மற்றும் பிரமாணங்களின் அடிப்படையில் இந்த |

பதவியணியினர் 1879 ஆகவும் காணப்பட்டனர். ஆகையால் வெற்றிடங்களின் எண்ணிக்கை 2477 ஆக இருந்தது. அவற்றில் 39 வெற்றிடங்கள் நிறைவேற்று மட்டத்தில் காணப்பட்டதுடன் அவை மேவுகை மட்டத்தில் நிரப்பப்பட்டன. இந்த வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பு செய்வதற்கு பல்வேறு தடைகள் காணப்பட்டதுடன் ஊழியர் வெற்றிடங்கள் இருப்பது எதிர்பார்க்கப்பட்ட கடமைப்பொறுப்பை நிறைவேற்றுவதற்கு தடையாக இருக்கக்கூடும் என்பது அவதானிக்கப்பட்டது.

வெற்றிடங்களை நிரப்புவதற்கு பல்வேறு தடைகள் உள்ளதுடன் இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது.

வெற்றிடங்களை விரைவாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.